சராசர ஜோதி

OR

முகம்மது நபி (ஸல்:)

BY

கு. மூ. முகம்மது முஹைய்தீன்.
கூத்தாநல்லூர்.

இஃது
மேனகர்
சன்மார்க்கத் தொண்டர் சபையாரால்
பிரசுரிக்கப்பட்டு

மஹான் முகம்மது நபி அவர்களின்
1407-ம் ஆட்டய
[illegible] தினத்தன்று வினியோகிக்கப்பட்டது.

14—6—1935

Q7'.417
N35
122049

நூன்முகம்.

அன்பார்ந்த சோதரீர்!

விண்ணுடை புனைந்த இந்த நிலப்பரப்பின்மீது நிறைந்து வாழும் மக்கட் பூண்டின் மல்கிய பல்வேறு பிரிவினரும் தத்தம் பழக்க வழக்கங்கட்கேற்ப வெவ்வேறு விதமான மதமென்ற கடவுள் நம்பிக்கையின் வழிபற்றியே நிற்கின்றனர். ஏதோ ஓர் சிறு சாரார் நாஸ்திக பாதாளத்துள் ஆழ்ந்து கிடந்தாலும், நாம் பெரும்பாலான மக்களின் நம்பிக்கை வழியையே இவண் எடுத்துள்ளோம். தத்துவார்த்த ஞானம் வளர்ந்து உச்சஸ்தானமெய்தி எப்பிரச்னைக்கும் காரண—காரியத்துடன் ஒத்த மூலத்தைத் தேடித்திரியு மிக்காலை, தங்கள் மூதாதையர் வழிவந்த மதப் பிரச்னைக்கும் அதன் ஒவ்வோர் அம்சத்திற்கும், புத்திக்கும்-யுக்திக்கும் பழக்க—வழக்கத்திற்கும் முற்றிலும் ஒத்த மூல தாதுவையே இது பொழுது மானிட சமூகம் வேண்டிநிற்கிறது. இத்துறையில் யாமும் லோக சமய சமாஜத்துள் சாந்தி மார்க்கத்தவர்—முஸ்லிம்கள்—என்ற ஹோதாவில் எமது ஆதாரபூர்வமான கக்ஷியை எமது உலக சகோதரர்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பது எமது பொதுக்கடமையாக இருப்பதுடன், இச் சாந்தி சமயத்தின் சேவையையே தனது தலைநோக்காகக் கொண்ட எமது சபாவின் தெள்ளிய நோக்கமாகவு மிருந்து வருகிறது. எனவே எமது மூலவேதமாம் குர்ஆன்ஷரீபின்

பலதிறப்பட்ட போதனைகளையும், அனுபோகத்தில் அனுஷ்டித்துக்காட்டிச் சென்ற இதன் தீர்க்கதரிசியாம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களின் ஜீவிதச் சுருக்கத்தைத் திரட்டிக் கூறிவிடுவதே அந்நோக்கத்திற் கேற்ற சாதனமாய்க் காணப்படுகின்றது. மேலும், சகோதர சமயங்களுடன் ஒப்பிட்டு நடுவமைந்த தோரணையில் சாலச் சிறப்புடைய தெதுவென்று அலசிப் பார்ப்பதற்கு அனுதுணையாக, இவ்வுலகப்பெரும் மதங்களுள் சிலவற்றையும் மூல அனுஷ்டான நோக்கங்களுடன் இதனிடையே புகுத்தியுள்ளோம்.

பல பிரிவுகளிலும் விரிவற்ற தோரணையில் விளக்கப்படும் இச் சிறு நூலைக் கையேற்கும் எமது பிறசமயச் சோதரர்கள் அனைவரும் இதனை நடுக்கண்ட வழிநின்று அலசிப்பார்த்து தத்தமக்கேற்ற துறையில் த்வமும் பலனை அடைவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

கு. மு. முகம்மது முகையதீன்,

சன்மார்க்கத் தொண்டர் சபை,
கூத்தாநல்லூர்,
14—6—1935.

காரியதரிசி.

சராசர ஜோதி

OR

முகம்மது நபி (ஸல்).

1. கடவுட்டன்மை

நாம் எழுதப்புகுந்துள்ள இந்நூலுக்கு முக்கிய மூலக் கருத்தானது மதமென்று சொல்லப்படும் பரம நம்பிக்கையே யாகும். இந் நம்பிக்கையானது மக்கட் குழாத்தினர் தங்களை இன்மை எனும் சூன்யதசையிலிருந்து இப்பூவுலகில் சிருஷ்டித்து, காத்து, வளர்த்துவரும் சிருஷ்டி கர்த்தன் உண்டென்றும், அவன் மூலமாகவே இவ்வண்ட சராசர மனைத்தும் ஆட்டிவைக்கப்படுகின்றதென்னும் அடிப்படையான நோக்கைக்கொண்டதேயாகும். எனினும், ஆதிகாலந்தொட்டு இதுவரையும், நம்பிக்கை என்ற மூலத்தில் ஆஸ்திகர்—நாஸ்திகர் என்ற இரு மாறுபட்ட நோக்குடையார் இருந்தேவருகின்றனர். இதனிருபகுதிகளையும் விசாரணை மூலம் அடியில் ஆராய்வோம்:—

A. ஆஸ்திகம். இவ்வகில மனைத்திலும் காணப்படும் சராசரங்கள் அனைத்தும், இவைகளின் சகல பழக்க வழக்

கத்திற்கும், சக்திக்கும் மேம்பட்டு நிற்கும் ஓர் அகண்ட சக்தியால் ஆக்கி, அடக்கி, அலைக்கழிக்கப்படுகின்றதென்பதேயாகும். இந்தச் சக்திக்கு பல்வருண சமயத்தாரும் கடவுள், ஆண்டகை, தம்பிரான், அல்லாஹ், காட் போன்ற பல் வேறு சிறப்புப் பெயர்களிட்டு அழைத்து வருகின்றனர். இத்தகைய ஓர் சக்தியை நாமும் நம்பி அதன் வழி நின்று நடக்க வேண்டியதவசியமா? என்று நாம் அலசிப்பார்க்க வேண்டும்.

வெளி ஆதாரங்களை இதற்குத் துணையாக முதலில் கொள்வதைவிட உள் ஆதாரமான நம்மையே—நமது பிரகிருதியையே—முதலில் கொள்வோம். ஸ்திரீ-புருஷ சங்கமத்தினால் ஸ்திரீயின் கர்ப்பக்குழலில் தங்கும் விந்துவான இள [illegible]நீரானது, நமது எப்புலன்களினதும் அறிசக்திக்கு அறவே எட்டாதவாறு, மாதமேற வேற ரத்தக்கட்டியாகவும் தசைக்கட்டியாகவும், பின் எலும்புகளுடன் கூடிய பரிபூரண பிண்டமாகவும் மாறிய பரிணமிப்பை யடைந்து, மேலும் பொம்மை என்றிருந்த உருவிற்கு சாலச்சிறந்த சலனச் சக்தியும் அருளப் பெற்று இவ்வவனியிடைத் தோற்றுவிக்கப்படுகின்றது. இவ் விலக்ஷணத் துள்ளி நாதமே நவ சாதனங்களுடன் நம்மிடைத் தோன்றி சிருஷ்டிகளாதிகோனாய் மிளிர்கின்றது. ஓர் சிறு வித்தான கொட்டையிலிருந்து வெளிவரும் செடியோ பல நிறமுள்ள இலைகள் நீண்டு வளர்ந்த கொப்புகள், தித்திக்கும்-புளிக்கும் பழங்கள் முதலியன உடைத்தாய் காக்ஷியளிக்கின்றது. இப்பூவுலகு அனைத்தையுமே குடையெனக்கவிந்து நிற்கும் அவ்விண்ணுலக விகசித அமைப்பின் சித்திரப்பெருமையும், உள்ளத்தையும், நேத்திரத்தையும் ஒருங்கே ஒறுக்கும் இடியையும், மின்னலையும் உற்றுநோக்குக. இவ்வகண்ட நீலநீர்க்கடலின்

நிர்மாண—க்ஷேம சேதனத்தை நினைவுகூறுக. பல்கோடி மக்களையும், விருக்ஷா விருக்ஷங்களையும், வானளாவும் சிகரமலைகளையும், வீரசூர விலங்கினங்களையும் தன்னுள் கொண்ட விசால பூமியின் விசேஷங்களைக் கவனிக்க.

அண்டசராசரங்களின் சிறப்புத்தலைவன் என்ற ஹோதாவில் இவ்வகிலத்தையே நர்த்தன நாடியாய் ஆட்டிவிக்கும் மனிதபாலன் ஆட்டமும் அகமும் ஒழிந்து தெற்றென விழுந்து பொட்டென மரித்துவிடுகின்றான். இஷ்டபானுவாய்க் கோறிச் சென்ற கருமம் தடைப்பட்டு ஏங்கி நிற்கின்றான். பல்வேறு யோசனை பலத்துடன் செய்யும் வியாபார திட்டத்தில் எதிர்பாராத பங்கமேற்பட்டு லோபமடைகின்றான். அஷ்ட சாதனங்களுடன் மரக்கலத்துணை கொண்டு கடல் யாத்திரை செய்கையில் திடீரெனப்புயலால் கலம் ஆழ்ந்து நீரிடைச்செறிகின்றான்.

மேலும், இவையன்றி இன்னும் எத்துணையோ பல்லாயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் இவ்வுலகிடை சிருஷ்டிகளின் சகல சக்திக்கும் மீறிய வகையில் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. இவற்றில் எதையேனும் நாம் அதே அம்சத்தில் நிர்மாணிக்க முடியுமா ? பாதுகாக்க முடியுமா ? உருக்குலைக்க முடியுமா? அல்லது அத்தகைய எதிரான சக்திகளிலிருந்து தப்பிப் பாதுகாத்துக்கொள்ள முடியுமா ? நமது அனுபவமும், அறிவும் கண்டறிந்தவரை இஃதனைத்தும் நம்மாலும் ஆகவே ஆகாது. அல்லது அந்த வஸ்துகளனைத்திற்கும் ஏற்படும் லாப லோபங்களைக் கவனிக்கும் போது, அவற்றிற்கும் தம்மையே ஆக்கி வளர்த்துக்கொள்ளும் விசேஷ சக்தியே கிடையாதென்றும், பிறிதொன்றின் பாற்பட்ட பொம்மையே என்றும் நிச்சயமாய்த் தெரிகிறது.

இத்தியாதி காரண காரியங்களை நாம் சீர்தூக்கும் பொழுது, நமது நெற்றிப் புலனுக்குத் தோன்ரு விட்டாலும் அறிவுப் புலனால் ஆழ்ந்து நிச்சயமாய் அறியப்படும் ஓர் அகண்ட சக்தி இவ்வண்டத்தையே ஆட்கொண்டு இருக்கின்றதென்றும், அதை நாம் தெரிசிக்காவிட்டாலும், ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அதன் ஆக்கினை இந்த யாக்கையில் நிலைத்து சர்வ சிருஷ்டியையும் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கிறதென்பதையும் அனுபவத்தில் நிதர்சனமாய் அறிகின்ரேம். மேலும், ஜன்ன-மரண விஷயாதிகளில் அதன்கீழ் நாம் முட்டமுட்டக் கட்டுப்பட்டு அதை முற்றிலும் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாகவே யாகின்ரேம். இவ்வழியில் அறிவனுசரணையாய் பிரத்தியக்ஷமாய் அறியப்படும் இப் பரம சக்தியைப் பின்னும் நம்பிக்கைக்கொள்ளாதவர் கண்ணிருந்தும் குருடு; செவியிருந்தும் செவிடு என்பதே போன்ற ஞானசூன்ய, மக்க ளிலக்ஷணமற்ற வர்க்கத்தின் உருபினரென்பதே மிகப் பொருந்தும்.

B. நாஸ்திகம். இவ்வகிலமும் அதன்பாற்பட்ட சிருஷ்டி பூதங்க ளனைத்தும் அவற்றிற்கு மேம்பட்ட பிறிதோர் பொருளால் அவை ஆக்க-காக்க-அனர்த்தமாக்கப்படவில்லை என்பதும், கால தேச வர்த்தமானங்கட்கேற்ப இயற்கையாகவே சகலமும் தானே தோன்றி தானே மறைகின்றன வெனலும், இவ்விகலோக வாழ்க்கையில் அடையும் நலரிடரைத் தவிர்த்து மற்ரோர் நோக்கமும் நமது இருக்கைக்குக் கிடையாதென்பதுமேயாகும்.

இப்பிரிவின் முதற்கூறில் கண்ட "சிருஷ்டி கர்த்தா" இல்லை என்பதற்கு ஆஸ்திக விளக்க களத்தில் காட்டியுள்ள பல்வகை ஆதாரம், ஆதேயம், அனுஷ்டானம், அனு

பவம், நிலை, நிகழ்ச்சி முதலியவற்றிலிருந்தே தகுதியான எதிர்க்கக்ஷியைத் தெரிந்து அதன் மூலமே இத்தகைய வாதம் எத்துணை தூரம் அறிவுலகிற்குஅப்புறப்பட்டிருக்கிற தென்பதை ஆராய்ந்தறியலாம். மேலும், செள்ளினம் முதல் யானை ராஞ்சி புள்ளினம் ஈருக, புல்லினம் முதல் பூந்தேக்கு வாகை ஈருக, நெத்திலி முதல் நெடுந் திமிங்கிலம் ஈருக தத்தமக்கே முற்றிலுந் தோன்ருத பல் வகை உருவகங்களில் தோன்றி வாழ்நாளில் தம் அவாவிற்கு மாற்றமான வழியில் தன்னையும் மீறிச் செலுத்தப்பட்டு, தன் பேராவலுக்குப் பூருவும் எதிராய்ப் பூமாதேவியை நீத்துச் செல்லும் காக்ஷி நம்முன் நிற்கின்றது. பிறிதோர் சக்திக்கு சிருஷ்டிகளிடம் வேலையே இல்லை என்ருல், தாமே சுயமாய் சகலசக்தி மூர்த் தியாய்த் திகழ்வதென்ருல், என் இத்தகைய எதிர்க்கக்ஷி சூக் குமத்தில் சிக்கி யுழலவேண்டும்? ஏதோ சிலவற்றில் நினைப் பதைப்போல் செய்து பலன் அடைந்துவிடினும், பலனடை யாது பாழ்படும் இன்னும் பலதையும் அதனுடன் சேர்த்து நோக்கின் சிருஷ்டிகள் அடைந்திருக்கும் சக்தி அவற்றிற்கே சொந்தமான உண்மையான தன்றென்றும், பறபொருளின் ஆகர்ஷண ஜோதியே என்பதும் தெளிவாகும்.

இதன் மற்ருேர் கூருன "தானே தோன்றி மறைதல்" என்ற அம்சம் சிருஷ்டிகட்குஇருக்குமாயின் அதேபோன்று தான் நினைக்கிறபடி இஷ்டப்படும் காலத்தில் பிரியப்படும் உருவத்தில் சமைய அல்லது செறிக்க சக்திபெற்றிருக்க வேண்டுவது நியாயமல்லவா? தோன்றுதல்தொட்டு தொலை யுதல் வரையில் சில அம்சங்கள் நினைப்புப்படி கைகூடி ணுலும் மிகுதமான விஷயம் நமக்கு எதிராகவே நடைபெறு கின்றன. இதேபோன்றுதான் மற்ற அறிவற்ற பொருள்கள் விஷயத்திலும் வைத்துப் பார்க்கவேண்டும். மேலும், இந்த

கூற்றுப்படி "இயற்கை" தான் உலகை நடத்துவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படி உலகை நடத்துவது இயற்கை என்றாலும் அதுவும் சிருஷ்டிப்பொருள்களையல்லாத மற்றோர் பொருளையே சுட்டுகிறது. அத்தகையப் பொருளையே ஆஸ்திகர் "ஆண்டவன்" என்றும், நாஸ்திகர் "இயற்கை" என்றும் கூறி வாதம் புரிகின்றனர். எனவே, உண்மையில் அச்சக்தி பெயரளவில் மாறுபட்டுக்காண்கிறதேயன்றி கருத்தளவில் இரண்டுமொன்றேயாகும். இவற்றிலிருந்து சிருஷ்டிகளின் இருப்புக்கும் இறப்புக்கும் தனிப்பட்ட ஓர் சக்தியே மூலமாய் இருக்கவேண்டுமெனவும் தெரிகின்றது.

மூன்றாவதாக, ஜீவிப்பிற்கு யாதொரு முக்கிய நோக்கமும் கிடையாதென்பது. மக்கள் இவ்வுலகிடைத் தோன்றி வளர்ந்து வளம் பெற்று உண்டு திண்டு உடுத்தி போகானந்தமும் சந்தான பாக்கியமும் பெற்று விட்டவளவிலேயே எத்தகைய உண்மை லக்ஷியத்தையும் பெற்று விட்டதாய்த் தோன்றவில்லை. மேகங்கள் ஒன்றுசேர்ந்தால் மழை பெய்கிறது; மழையால் செடி, கொடி, மரங்கள் வளர்ந்து காய் கனி வித்துகளைத் தருகின்றன; அதை ஜீவராசிகள் வயிறாறப் புசித்து வளர்ச்சியடைகின்றன. காற்று பிராணவாயுவைக் கொடுத்து ஜீவாத்மாக்களை சுவாசிக்கச்செய்கிறது. மேலும் தாவரவர்க்கங்களில் படும்போது இனத்துக்குத் தக்கபடி பச்சை, மஞ்சள் ஊதா முதலிய வர்ணங்களில் அவற்றின் இலை மாறுதலடைகிறது. சூரியனால் உலகிற்கு அக்கினியும், ஒளியும் கிடைக்கின்றன. நமது நித்திய சிறிய பெரிய கருமங்களனைத்தும் எத்தகைய நோக்கமும் இன்றி நடைபெறுவதில்லை. இவையும் இன்னும் பலதும் ஏதோ ஒவ்வோர் நோக்கத்துடன் நடந்துவர, மனிதப்பிறவி மட்டில்

பிறப்பிற்குறிய முக்கிய லக்ஷியமற்றிருப்பது கொஞ்சமும் அறிவிற்கு ஒவ்வவில்லை. சிருஷ்டி கர்த்தனை சட்டபூர்வமாய் ஒப்பி, அவனாலேயே அனைத்தும் நிர்வகிக்க படுகிறதென்பதை உணர்வார்க்கு, மக்களுக்கு முக்கிய லக்ஷியமொன்றிருக்கவேண்டுமென்பது தெள்ளிதிற் புலனாகும். இவ்விலக்ஷியம் இப்புத்தகத்தின் பின்பத்திகளில் தோன்றும்.

2. மதமும், தீர்க்கதரிசிகளும்.

மதம் அல்லது சமயம் என்பது முந்திய அத்தியாயத்தில் விவரித்தவாறு லோக சராசர சிருஷ்டி கர்த்தன் ஒருவன் உண்டு என்பதோடு, அத்தகைய பரமகர்த்தா தன்னால் சிருஷ்டித்த வஸ்துக்களில் ஆறறிவுடன் கூடிய-பகுத்தறிவு-அவற்றின் சிறப்புற்ற தலைவனாகத் திகழும் மக்கட் பூண்டினருக்கு அவர்களின் ஆரம்பதோற்ற காலந்தொட்டு இது வரையில் தனது நேரியவழியில் அவர்களை நடத்திச் செல்வதற்காக உரிய சிறந்த சட்ட திட்டங்களை அனுப்புவதற்குச் சாதனமாக இருந்திருக்கும் பரிசுத்தத் தீர்க்கதரிசிகள் மீது திட நம்பிக்கை கொள்வதுமாகும். மதம் என்பதற்கு நம்பிக்கையின் பாதை-வழி என்பதே பொருளாகும். இத்தகைய பாதை மக்கட் பூண்டான நமக்கும் அவசியமா? என்று பார்ப்போம். இத்தரணியில், சூரியன், சந்திரன், மற்ற ஒளிக்கணங்களும், தம் தம் தொழிலாற்று நிமித்தம் சுழன்றுவரவேண்டிய பாதை வானமண்டலம்; மரக்கலங்களும், படகுகளும் ஓடிச்செல்லவேண்டிய வழி நீர் மயமான சமுத்திரமண்டலம்; காற்றும் நீராவியும் வீசிச்செல்லும் மார்க்கம் ஆகாயமண்டலம்; மக்களும் ஏனைய ஜீவராசிகளும் நடந்து ஊர்ந்து திரியவேண்டிய தடம் பூமண்டலம் ஆகவும், இன்னும் பலவேறு வஸ்துக்களும், இயல்பிற்

கொத்த பற்பல வழிபற்றியே திகழ்கின்றன. இஃதே போன்று, மக்களுக்கும் முக்கியார்த்தமான ஓர்பாதை இருக்கவேண்டுவது நியாயமல்லவா? அதுவோ, மனிதன் இவ்விகலோகவாழ்நாளில், தனது லக்ஷியமென்ன? தனது கர்த்தன்யார்? தான் இங்குசெய்யவேண்டிய வேலைத்திட்ட மென்ன? தான் எங்கிருந்து இங்கு வந்துள்ளான்? பின்னர் எங்கு செல்வான்? என்பனவற்றை முக்கியம்தெரிந்து தெரிந்தபடி யொழுகித்தேருவதேயாகும். இத்தகைய அற்புதவழிகளை காட்டுவான்வேண்டி ஆண்டவன் அறிவிற் சிறியோராய உலக மக்களுக்கு இவர்களின் உற்பத்திக் காலத்திலிருந்தே அந்தந்த காலத்தில் ஒவ்வோர் ஜாதி-தேசத்தாருக்கும் வெவ்வேறு தீர்க்கதரிசிகளை அனுப்பி லோகவாழ்வில் மக்கட்குவேண்டிய சட்டத் திட்ட மனைத்தையும் ஒருங்கே போதித்துவந்திருக்கிறான்.

இம்மாதிரி அனுப்பப்பட்ட மதங்களுள், சரித்திர வாயிலாய் பார்க்கும்போது, நோஹ் (நூஹ்) அப்ரஹாம் (இப்ருஹீம்) டேவிட் (தாவூது) மோஸஸ் (மூசா) ஜீஸஸ் (ஈசா) முதலியோரது மதங்களும், புத்தமதம், இந்து மதம் முதலியனவும் தென்படுகின்றன. இவற்றுள் மக்களின் வளர்ச்சிக்கு தக்கவாறு ஒன்றன் பின் ஒன்றாக திருத்தி திருத்தி பழயன்வெல்லாம் கடவுளாலேயே ஒழிக்கப்பட்டு போய் இருப்பதாகவும் தெரிகிறது இவைகளிற் பெரும் பாலானவைகள் ஆதிகாலத்தில் ஏக நாயககொள்கையையே தன் தலை நோக்காகக்கொண்டிருந்திருப்பதாகத் தெரிகிறது. காலஞ்செல்லச் செல்ல விசாலஞானமற்றோரால் அந்தந்த சமய அனுஷ்டானங்களுள் பல தெய்வவணக்கமும், விக்கிர வணக்கமும் புகுந்து தாண்டவமாடத்தொடங்கியது. அதனாலேயே அவற்றை விசாரணைவிளக்கமுள்ள மக்கள் பின்பற்ற

யோக்யதையற்றுவிட்டது. மெய்யான கர்த்தர்வழிப்பாடு ஒழிந்து, தெய்வத்துரோகம் மலிந்த காலத்தில் தான் அவனது கடைசிமதமான இஸ்லாமார்க்கம் உலகிற்கு அருளப் பெற்றிருக்கிறது. இதன் உண்மையை பின்வரும் விபரத்தி லிருந்து செவ்வனே தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்டபாருவில் உலகிடைப் பலமதங்களிருப்பதாக கூறப்பட்டிருப்பினும், இக்காலே, அவற்றுள் பல ஜீவநாடி யற்ற தோரணையில் வெகு சொற்பஜனத் தொகைகளைக் கொண்டதாக இருக்கின்றன. இவைகளைவிடுத்து, இது போது இவ்வுலகில் பெரிய ஜனத்தொகைக் கொண்டதாக பார்ப்போமானல், அவை புத்தமதம், ஹிந்து மதம், கிருஸ்தவசமயம், இஸ்லாம் மார்க்கம் என்ற நான்கு புள்ளிகளிலேயே அடங்கிவிடும்.

A. ஹிந்து மதம். சுமார் 3500 வருடங்களுக்கு முன் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் குடியேறிய ஆரியர் மரபைச்சேர்ந்தோரின் கொள்கையாகும். இவர்கள் எந்த தீர்க்கதரிசியின் வழிவந்தோர் என்பதற்குச் சரியான ஆதார மொன்றும் நமக்குகிடைக்காவிட்டாலும், இவர்களிடம் பசு தெய்வவணக்கம் அனுஷ்டானத்தில் இருப்பதைப்பார்க்கும் போது, ஓர் சமயம் மோசஸ்தீர்க்கத்தரிசியின் வழிவந்தோராக இருக்கலாம் என்று தெரியவருகிறது. இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்ததும் இந்த ஜோசியத்தை ஓரளவுப் பலப்படுத்துகிறது. இவர்களின் பூர்வகால மத நோக்கு எவ்வாறிருப்பினும் நடைமுறைக் காலத்தில் பிரஹ்மா, விஷ்ணு, சிவன்போன்ற பல நாயககொள்கையும் வானம், ஆகாயமண்டலம், பிரகாசம், சூரியன், நெருப்பு, காற்று, எமன் முதலிய இயற்கைப்பொருள் வணக்கமும்,

சிவன், காளி, மாரியாயிபோன்ற விக்கிரக வணக்கமும் மோக்ஷ சாதன ஜெபங்களாகத்திகழ்கின்றன. மேலும், இவைகளை அனுசரித்தே அவர்களின் ருக்வேதம், சாம வேதம், யஜுர்வேதம், அதர்வணதேம் முதலியவேதாகம உபநிஷத்துகளும் இருப்பதாகத்தெரிகிறது.

முதலாவதாக, பல நாயக ஆக்ஷியை எடுத்துக்கொள்ளு வோம். சாமான்ய ஆண்டி முதல் அரசன்வரை தங்கள் காரியாதிகளில் இருவர் அன்றி பலர் கூட்டுறவை விரும்புவ தில்லை. ஏதோ அப்படி பலர்கைக்கு ஆளாகும் எந்த விஷயமும் அபிப்பிராயபேதமற்று ஏகோபித்தவழியில் ஒப்பப்பட்டோ அல்லது முடிக்கப்பட்டோ இருப்பதாகத் தெரியவில்லை. இவ்விகலோகத்தின் சமாசாரங்களிலேயே சர்வாதிகாரபீடமொன்று அவஷியம் தேவைப்படுகிறது. இதைவிட பன்னூறு மடங்கு விசாலித்த சர்வசிருஷ்டி களின் நிர்மாண, நிர்வாகத்திட்டத்தில் அதிகாரிகளாய் பலர் வீற்றிருந்தால் சராசரங்களின் நடைமுறை நிகழ்ச்சிகள் ஏகோபித்த ஒரே அளவின் கீழ் எவ்வாறு நடந்தேறும்? அப்படியாயின், மாறுபட்ட அதிகாரத்தின்கீழ் வதிவோர் எத்தகைய தொந்தரைக்கு ஆளாகவேண்டி இருக்கும்? எனவே, எத்தகைய நிர்வாகமும் பலர் அற்ற ஏகக்கட்டுப் பாட்டின் கீழே-ஏக கடவுளின் கீழே இருப்பதே முற்றிலும் பொருத்தமாய் தெரிகிறது.

மேலும், சர்வ சிருஷ்டிகளையும் சமைத்து ரக்ஷிப்பதாக வைத்துக்கொள்ளும் கர்த்தன் என்போன் இச்சகல படைப் பினங்களின் ரூப-அரூப சக்திகள் அனைத்திற்கும் மேற் பட்ட சக்தியையும், இச்சிருஷ்டி பூதங்களால் தனக்கு இழைக்கப்படும் இடரையும் தட்டிக்கொள்ளும் ஆற்றலையும்

பெற்றிருக்கவேண்டுவது மகா முக்கியமல்லவா? மேகத்தால் மறைக்கப்படும் வானமும், காற்ருல் அலைக்கப்படும் ஆகாய மண்டலமும், இருளால் மூடப்படும் பிரகாசமும், மப்பால் மூடப்படும் சூரியனும், தண்ணீரால் நூர்ந்துவிடும் நெருப்பும், நமது கையால், மண்ணுல், கல்லால், கட்டையால் செய்யப்பட்ட விக்கிரக சொரூபங்களும், எப்படி கடவுட்டன்மைபெற அருகதையாகும்? விக்கிரகபொம்மைகளுக்கு பிறருலிழைக்கப்படும் இடுக்கணைத் தட்டிக்கொள்ளத்தான் முடியுமா? முடியாது. நம்மைப்படைத்த கடவுளையே நாமும் பொருள்களால் உண்டுபண்ணி அவற்றை நாமே வணங்கினுல் இதில் கர்த்தன் யார்? சிருஷ்டியார்? மாறி மாறி இருவரும் கடவுளாகவும் சிருஷ்டியாகவும் ஆகி சுழலவேண்டியதுதான். இதன் மூலத்தையே ஏற்க அறிவுதயங்குவதால் இனி பிரிவுகளாதிகளும் இதேதோரணையிலேயே அஸ்திவாரமிடப்பட்டிருக்குமாதலால் அவற்றை அதிகம் விவரிக்கவில்லை. இக்காரணுதிகளால் இம்மதம் உலகமக்கள் அனைவருக்கும் ஏற்றதாய் காணப்படவில்லை.

B. புத்தமதம். கிருஸ்து பிரானுக்கு 567 வருடங்களுக்கு முன் ஹிமாலயப் பிரதேசத்தில் சாக்கியர்களின் அரசகுமாரனை கௌதம புத்தர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இவர் தமக்கு முன் இருந்த மதங்கள் பல தெய்வ விக்கிரக வணக்க வகைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததனுல் அவற்றை ஏற்காது புதிய கடவுள் வணக்க மதமொன்றை அவாவித் திரிந்தார். அவரது எண்ணத்திற்கு சாக்கிய மகாமுனி என்ற ஓர் மகாரிஷியால் சாதனங்களைப்பெற்று தேவ அருளையும் பெற்று தமது மார்க்கத்தை ஸ்தாபித்தார். அதன் ஆரம்பக் கொள்கைகள், கர்த்தர் ஒருவர் உண்டு. அவரது

ராஜ்யத்தை அடைவதற்கு மக்கள் தனது ஐம்புலனுதிகளை யடக்கி, தன் செயல்களுக்குத் தானே காரணபூதனுய் நின்று, மனிதர்களிடம் பக்ஷம்காட்டி மற்ற ஜீவப்பிராணிகளிடத்தில் அன்புகாட்டி ஜீவஹத்தி செய்யாதிருந்து லோகத் தர்மியாய் வாழவேண்டும் என்பதாகும். இப்புத்தமதம் இந்து மதத்தை விட அதிவேகமாய் பரவியது. துர் அதிர்ஷடவசமாக புத்தர்பிரானுக்குப் பிற்காலத்தில் வந்தவர்கள் புத்தரையும், அவரது சிஷ்யர்களான மான்ங்க்களையும் உருவங்களாகச் செய்து அவற்றை வணங்கத் தலைப்பட்டுவிட்டனர். இப்போது இது இந்தியாவில் வெகு சொற்பஜனங்களைக் கொண்டிருந்தாலும் திபேத் சைனு, சயாம், ஜப்பான், சிலோன், பர்மா முதலிய பிரதேசங்களில் அதிகமாக பரவி இருக்கிறது. இதுவே இச்சமய உலக ஜனத்தொகையில் முதலாவது பெரிய ஜனத்தொகைக்கொண்ட மதமாக இருந்துவருகிறது. மேலும் தற்கால சயாம் தேசபுத்தர்கள் விக்கிரகத்தொழுவத்துடனில்லாது, கடவுள் என்ற சக்தியே கிடையாது என்ற நாஸ்திக பாதாளத்துள்ளும் இறங்கி விட்டனர். இதன் அனுஷ்டான அடிப்படைகளால் இதுவும் பரிபக்குவ காரண அறிவினர்களால் கையேற்க ஒத்ததாய் இல்லை; அத்துடன் ஜீவப்பிராணிகளை ஆகாரமாகக் கொள்ளாதிருக்க உலக மக்கள் எல்லோரும் எப்படி பொருந்துவார்கள் என்பதையும் யோசியுங்கள். சாத்தியமற்றதும், புத்திக்கு ஒவ்வாததுமான பல கொள்கைகள் இதிலும் நிறைந்து இருப்பதால் இதுவும் லோகமக்கள் அனைவரும் ஏற்கத்தக்கதாய் இல்லை.

C. கிருஸ்தவசமயம். முகம்மது என்னும் தீர்க்கதரிசிக்கு 571-ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீன் பிரதேசத்தில் ஜீஸஸ்கிருஸ்து என்ற தீர்க்கத்தரிசியால் பரத்தப்பட்டது. அந்த மகானல் ஆரம்பகாலத்தில் ஏகக்கடவுள் தன்மையே

வற்புறுத்தப்பட்டது. அவரது ஜீவிய காலத்திலேயே பெரும்பாலார் இவரது உபதேசத்தை கையேற்காது பழய மௌட்டீக கொள்கையிலேயே ஆழ்ந்திருந்தனர். அவரை ஒப்பிய ஓர் சிலரும் அபிமான வேகத்தால் அவரை கடவுளின் குமாரர் என்றும் அவரின் தயார் மேரியை கடவுளின் பாரியை என்றும் கூறி மொத்தம் முக்கடவுள்—திரியேகத்துவம்—உள்ளமதமாக மாற்றிவிட்டார்கள். இது ஐரோப்பா, அமெரிக்கா முதலிய காண்டங்களில் பரவி இது பொழுது உலக ஜனத்தொகையில் இரண்டாவது பெரிய தொகையை தன்னுள் கொண்ட மதமாக இருக்கிறது.

இந்த அத்தியாயத்தின் A. பிரிவின் கீழ் சொல்லப்பட்டபடி கடவுள் தத்துவத்துக்கு ஏகதன்மையைத்தவிர்த்து திரியேகத்துவ ஆட்சி என்பது முற்றிலும் பொருத்தமற்ற விஷயமென்பது பிரத்தியக்ஷம். மனிதவர்க்க தோற்றகாலந் தொட்டு மக்களை சீர்படுத்துவதற்கு அவர்கள் கூட்டத்திலிருந்தே தீர்க்கதரிசிகள் மூலம் உபதேசித்து வந்த கர்த்தர், இந்த கிருஸ்துவின் காலத்தில் தமது வேலையின் உதவிக்காக மனைவியையும் புத்திரனையும் உண்டாக்கிக்கொண்டாரா? அல்லது நிர்வாக கஷ்டத்தை லெகுவாக்கி கொள்ளும் பொருட்டு புத்திரரை ஏற்படுத்திக்கொண்டாரா? சகல சக்தியாலும் மேம்பட்டு இருக்கும் கடவுள், நினைத்ததை விநாடியில் முடிக்க வல்ல கடவுள், சிருஷ்டி இனமான மனிதஜாதியிலிருந்தே தமக்குரிய பாரியையும், பிள்ளையையும் பெற்று தமக்கு உதவிக்காக ஆக்கிக்கொண்டாரா? இவர்களின் றி லோககர்மங்களை அவர் செய்வதற் கியலாதா? இந்தவிதமான கடவுள்தத்துவத்திற்குப் புறம்பான விஷயத்தை அவருடன் பிணைப்பது பொருத்தமற்ற விஷயமாகவே காண்கிறது.

மக்களைப்போல் உண்டு உடுத்து சுகதுக்கங்களில் ஈடுபடும் ஜீஸசுக்கும் அவர்தாயார் மேரிக்கும் கடவுள்தன்மை உண்டென்பதை அறிவுடையார் ஏற்றலரிது. கிருஸ்துவர்களின் 'கூற்றுப்படி இயேசுவும், மேரியும் மரணித்து விட்டார்கள். சிருஷ்டி லக்ஷணமான மரித்தல்போன்றதைவர்த்து நின்றோரை கடவுளர் என்று நவில்வது நல்லார் தம் சொல்லாகத் தெரியவில்லை. மேலும் இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டு இருக்கும் தருவாயில் "ஏலீ! ஏலீ லாமா சபக்தானி" (கர்த்தாவே! கர்த்தாவே! என் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தம்) என்று கூறியதாக பைபிள்—மத்தேயு 21ம் அதிகாரம், 46ம் வசனத்தில் சொல்லப்படுகிறது. இயேசுவே தன் வாயால் கர்த்தாவே! ......என்று கூப்பிடுவதால் இவர் தேவனுமல்ல, தேவகுமாரனுமல்ல என்பதும், சிலுவையில் அறையப்படுவதால் இது மனித சுபாவமானதால், இவர் நிச்சயமாக மனிதரே என்றும் தெரிந்து கொள்கின்றோம்.

மேலும் கிருஸ்தவர் அனைவர் பாவ பரிகாரணத்திற்காகவே இயேசுநாதர் சிலுவையில் ஏறி ரத்தம் சிந்தினார் என்பது அவர்கள் சித்தாந்தம். அதனால் எல்லார் பாவமும் மன்னிக்கப்பட்டுவிட்டதாம். அப்படியாயின் அந்த மார்க்கத்தில் பிரவேசித்துவிட்டு, குடித்தாலும் விபசாரம்செய்தாலும் கொலை களவு செய்தாலும் எவ்வித தோஷமுமில்லை என்று ஏற்படுகிறது. ஆனால், ஐரோப்பியநாட்டுக் கிருஸ்தவ அரசாங்கங்கள் இன்று கொலைக்குத் தூக்குத் தண்டனையும், களவிற்கு ஜெயிலும், மற்ற மற்ற குற்றங்கட்கு தக்கப்படியும் தெண்டிப்பதேனோ? ஓர் சமயம் தங்கள் சமயக் கொள்கையில் தங்களுக்கே திடநம்பிக்கையில்லையோ? என்னவோ? இத்தகைய விபரீத கொள்கையை யுடையதாக இம் மதமும்

இருப்பதால் இதையும் தத்துவ ஞானமுள்ள உலகமக்கள் அனைவரும் பின்பற்ற முடியாமலிருக்கிறது.

D. இஸ்லாம் மார்க்கம். இது முகம்மது நபி அவர்களால் இன்றைக்கு 1367 ஆண்டுகளுக்குமுன் அரேபியாவில் வெளியாக்கப்பட்டது. இம்மஹான் தமது லக்ஷியமனைத்தும் தமக்கே சொந்தமானதன்றென்றும், கர்த்தாவினிடமிருந்துதான் வெளியாக்கப் படுகிறதென்றும் போதித்தார். இது இச்சமயம் உலகில் மூன்றாவது பெரிய ஜனத்தொகை கொண்ட மதமாகத் திகழ்கின்றது. இதன் மூலக் கொள்கை ஏகதெய்வக் கொள்கையும், விசுவ சகோதரத்துவமுமேயாகும். தோன்றிய காலந்தொட்டு இதுவரை அணுத்துணையும் இதன்மூலக்கொள்கையில் மாறுபட்டதேயில்லை. தனிப்பட்ட ஒரே கடவுள் ஆட்சியேதவிர, கருத்தளவிலோ, பெயரளவிலோ ரெட்டைக் கடவுளர் ஆட்சி இதில் கிடையவே கிடையாது. சமஸ்தகோடி ஜனங்களிடமும் சகோதரவாஞ்சையாகவே இருத்தல்வேண்டும். சர்வ ஜாதி ஜனங்களும் இதில் பிரவேசிக்கலாம். எவ்வருணத்தாருக்கும் இதை உபதேசிக்கலாம். யாராயிருந்தாலும் இம்மதத்தைக் கைக்கொள்ளத்தான்வேண்டும் என்ற வெறும் கட்டாய சம்பிரதாயமே இதில் கிடையாது. பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது. செயலே பாண்டித்யமே சிரேஷ்ட மூலம். ஆண்டானும் அடிமையும் சமம். ஆண்பாலும் பெண்பாலும் சமம். ஆண்களைப் போன்று பெண்களுக்கும் குடும்பச் சொத்தில் பாகமுண்டு.

எல்லா ஜனங்களுக்கும் ஒரே கோவில். லோகாயதத் துறையிலும் பாரமார்த்திகத் துறையிலும் புத்திக்கு ஒத்த சட்டம். எல்லாவற்றிலும் விசேஷமாக நம்பிக்கையைப்

போல் செயலும்பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்பதாகும். பெண்கள் சமூகத்திற்கு வெகுகாலமாக மறுக்கப்பட்டிருந்த விதவா விவாகமுமுண்டு. இன்னும் எத்தனையோ விதமான மக்கட்கு அனுஷ்டான சாத்தியமாக உள்ள விஷயங்களை தன்னுள் கொண்டதாய்த் திகழ்கின்றது. இவற்றை விரிவாக உணர்ந்து கொள்வதற்கு இதன் தீர்க்கதரிசியாம் முகம்மது (ஸல்) அவர்களின் தெளிவான ஜீவிய சரிதையை இதன் கீழ் ஊன்றி படிக்குமாறு வேண்டப்படுகிறது.

3. முகம்மது (ஸல்.)

அவதாரம்.

இவ்வண்ட சராசர மனைத்திற்கும் அருட்ஜோதியாய் தோன்றிய இப்பெருமகர், இப்பூலோகத்தின் பாலைவன மெனப்பெயர் பெறும் அரேபிய தீபகர்ப்பத்தில், ஹிஜாஸ் மாகாணத்தில், மக்காவெனும் நகரில், அப்ரஹாம் தீர்க்கதரிசியின் வழிவந்த அத்னன் கோத்திரத்தின் குரைஷிக் குலத்தின் திலகமாய் இன்றைக்கு 1407 ஆண்டுகட்கு முன் அவதாரமானார்கள். ஜனனமாகுமுன்பே தகப்பனும், பின்பு சில வருடங்களில் தாயும் தேகவியோகமாய் விட்டார்கள். அப்புறம் இவர்கள் பாட்டனார் அப்துல்முத்தலிப் இடமும் பின் சிறியதந்தை அபூதலிப் இடமும்வளர்ந்து வந்தார்கள்.

இவர்களின் இளமைகாலத்தில் ஏனையச்சிறார்களுடன் கூடிவிருதாவில் பொழுதுபோக்காமல் தமது ஆடுகளை மேய்ப்பதும், பிறர் எவருக்கும் எவ்வித துன்பமும் செய்யாது தன்னந் தனியே குந்தி பலவிதமான சிந்தனையிலுமே ஆழ்ந்திருப்பது வழக்கம். அச்சமயம் இவர்களை பாடசாலைக்கனுப்பி எழுத்து வாசனையுள்ளவராகச்செய்ய எவரும்

திணிந்தனரில்லை. எனவே, இயற்கை ஞானத்திலேயே இவர் வளர்ந்துவந்தார் என்றேசொல்லவேண்டும். எனினும், ஞான தீக்ஷண்யத்தில் அக்காலை இவரது சகபாடிகள் எவருக்கும் ஒரு சிறிதும் கீழ்ப்பட்டவராக இவர் இருந்ததில்லை.

திருமணம்:—இம்மாதிரியே இவர் தமது வாழ்க்கையை நடத்திவந்து 25வது பிராயத்தில் வணிககுல விதவைப்பெண்ணை ஹதீஜா என்ற மாதைத் தமது முதல்தாரமாக ஏற்றுக்கொண்டார். அதுகாலை அப்பெண்மணி 40 வயதினராக இருந்தார். இந்த ஏகப்பிருட்டியாரோடேதான் தமது 50 வயது வரை காலங்கழித்துவந்தார் அதன் பின் 60 வயது வரை 11 மனைவியரை மணந்துள்ளார். இப்பெருமான் அவர்களை காமப்பித்தரென்றும், ஸ்திரீலோலரென்றும் பிறமத வாதிகள் குறை கூறுகின்றனர். இதன் உண்மையைக் கவனிப்போம்.

அரேபியாவைப்போன்ற உஷ்ணப்பிரதேசத்தில் வாலிப மூர்க்க வயதான 25 வயது உள்ளவர் அதுவரை எவ்வித காமக்காதகச்செயல்களிலும் அறவே ஈடுபடாது அக்கால மக்களிடம் "அல்அமீன்" என்ற நம்பிக்கைப் பட்டத்தைப் பெற்றுள்ளார். விவாகமான 25 வயது முதல் 50 வயது வரை அக்காலத்திய பழக்கமாக இருந்த பலதார மணம், பெண்கள் வைப்பு போன்றவைகளிலும் ஈடுபடாது தன் வயதினும் 15 வயது மூத்தாளான அந்த விதவை கதிஜாவுடன்வாழ்க்கை நடத்தியுள்ளார். இவ்விருவிருத்தாந்தங்களிலிருந்தும் இவரை அக்குறைக்கு இலக்காக்க இடமில்லை. இவர் மணந்த மற்ற மனைவியரும் பெரும்பாலோர் விதவைகளே. அழகிலோ, செல்வத்திலோ சிறந்தோரல்லர். ஆயிஷா

ஒருவரையே தமக்கு வேண்டிய மனைவியாய்க்கொண்டார். மற்றோர்களை எல்லாம் புருஷனை யுத்தகளத்திலோ அல்லது சாதாரணமாகவோ இழந்து ஆதரிப்பாரற்றிருந்த வகையிலும், எதிரிகளான குடும்பங்களை தங்கள் குடும்பத்துடன் இணைத்து பிணக்கை தீர்த்துவிடவேண்டும் என்ற முறையிலுமே இவர் நிச்சயமாக மணந்து கொண்டார். ஏதோ சிலர் பிற அரசர்களால் இன்னாருக்கு சன்மானிக்கப்பட்டவராயுமிருந்தனர். இவருடைய சரிதையை உள்ளபடி உணரும் எவரும் இவர் காமப்பித்தராகவோ, ஸ்திரீலோலராகவோ இருந்தார் என்று கூற முன்வரமாட்டார்

தீர்க்கதரிசனத்துவம். இன்னாருக்கு இவரது 40-ம் வயதில் ஆண்டகையினிடமிருந்து தீர்க்கதரிசனத்துவம் வெளியாக்கப்பட்டது. சிருஷ்டி கர்த்தன் ஒருவனே என்றும், கல்லையோ, கட்டையையோ, மனித சொரூபங்களையோ வணங்கக்கூடாதென்றும், மக்களுக்குப் போதித்தார். இவரது உபதேசத்தை ஆரம்பத்தில் வெகு சொற்ப ஜனங்களே செவியேற்றனர். மிருதமான மக்கள் இவரை எற்காது பித்தன் என்றும், பொய்யன் என்றும் சொல்லி இவரை அதிகம் இம்சித்தனர். இவர் நடக்கு மிடங்களில் முட்களைப் பரப்பி இவர்மீது சாம்பலைக்கொட்டி அவமதிப்பர். வாயாற ஏசி வாதுக்கிழுப்பர். கழுத்தில் துணியை முறுக்கி ஹிம்சிப்பர். இவரது சிஷ்யர்களில் சுதந்திர புருஷர்களும் அடிமைகளும் அதிகமாக ஹிம்சிக்கப்பட்டார்கள். உதுமான் (3-ம் கலீபா) கயிற்றால்கட்டி தன் மாமனால் நன்றாய் உதைக்கப்பட்டார். உமர் (2-ம் கலீபா) தமது சகோதரியை ரத்தஞ் சிந்தப் புடைத்தார். பிலால் என்ற அடிமையை அவரது எஜமான் கால் கைகளைத் தளைந்து பாலைவன வெய்யலில் கிடத்தி நெஞ்சின்மீது கொதிக்கும் கல்லையும் தூக்கிவைப்

பார். யசீர் என்பவர் அவரது கால்கள் இரண்டும் இரண்டு ஒட்டகங்களில் கட்டப்பட்டு அவற்றை வெவ்வேறு திசைகளில் ஓட்டி அவரை இரண்டாகக் கிழித்துவிட்டார்கள். இப்படியெல்லாம் ஹிம்சித்து இந்தக் கொள்கையை ஒப்ப வேண்டாமென்று முயற்சித்தனர். எனினும், இவ்வியக்கத்தார் உயிர்போயினும் தமது எண்ணத்தைமட்டும் மாற்றிக் கொண்டனரில்லை.

மக்காவை நீத்தல். நாளேற வேற மக்கா வாசிகளின் தொந்தரவு புதிய இயக்கத்தாருக்கு சகிக்கமுடியாத தாகி விட்டது. எனவே சிலர் ஆப்பிரிக்காவில் குடிஏறிவிட்டனர். மற்றும் சிலர் மதீனாவில் குடியேறினர். கடைசியாக ஆண்டவனிடமிருந்து தீர்க்கதரிசியையும் மக்காவை விட்டு மதினாவிற்குசென்று குடிஏறும்படி கட்டளை கிடைத்தது. தம்மைக்கொல்லும் பொருட்டு வாளேந்தி நின்ற ஒரு சிலரின் கண்ணிற் படாது தமது 53-வது வயதில் மதீனாவில் சென்று இருந்துவிட்டார். அங்கு சென்றும் மக்காவாசிகள் இவரை தொந்தரவு செய்யாதிருக்கவில்லை. பன்முறை அவருடன் யுத்தகளத்திலும் சண்டை செய்திருக்கின்றனர்.

மக்காவாசிகளால் இம் முஸ்லிம்கள் மீது தொடுக்கப் பட்ட யுத்தங்களில் 3 மஹா பெரியனவாகும். மற்றபடி எஹூதிகளும், நசாறுக்களும் இவர்களின் மீது யுத்தம் தொடுத்திருக்கின்றனர். அரேபியாவே ஒருங்கே இவர்களுடன் எதிர்த்து நின்றபொழுதும் இவர் தமதுகொள்கையான ஏக நாயகத்துவத்தையும், ஏக சகோதரத்துவத்தையும் விட்டனரில்லை. இவருடைய யுத்தங்கள் அனைத்தும் தற்காப்பின் நிமித்தமே நிச்சயமாக நடைபெற்றிருக்கின்றன. இஸ்லாத்தைப் பரப்புவதற்காக வாளேந்தப்படவே இல்லை. அன்னியமதஸ்தர்கள் இவ்விஸ்லாமதம்வாளாலேயே பரத் தப்பட்டதாக வீண்வாதம் செய்கின்றனர்.

குறைஷிகளால் செய்யப்பட்ட 3 யுத்தங்களுள் முத லாவது பத்ரு யுத்தம் மதீனாவிற்கு சுமார் 70 மைலிலும் மக்காவிலிருந்து சுமார் 200 மைல் தூரத்திலும், 2 உஹுத் யுத்தம் மக்காவிலிருந்து சுமார் 267 மைல் தூரத்திலும் மதீனாவிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலும், 3 அஹ்ஜாப் யுத்தம் மதீனாவை முற்றுகை யிடப்பட்டும் செய்யப்பட் டிருக்கிறது. இந்த விபரத்திலிருந்து வாளேந்தியுத்தத் திற்கு வந்தவர்கள் யார்? மெக்காவாசிகளா? அல்லது மதீனாவாசிகளா? என்பதும் தற்காப்பின் நிமித்தம் யுத்தம் செய்தவர்கள் எந்த ஊரார் என்பதும் நிச்சயமாகத் தெரிய வரும். மேலும், எமது வேதமான குர்ஆனும் இஸ்லாத்தை ஒப்புக்கொள்ளாத காரணத்திற்காக மட்டும் எவரையும் கொலை செய்யும்படி ஓர் உத்தரவுகூட செய்யவில்லை. ஆனால், அதற் கெதிரிடையாக மத விஷயத்தில் கட்டாயப்படுத்த வேண்டாமென்று ஸ்பஷ்டமாகக் கூறிக்கொண்டிருக்கிறது. ஓர் மதத்தின்பெயரால் வேலைசெய்பவர்கள், அம்மதத்தின் உபதேசத்திற்குமாறாக எப்படி நடத்தல்கூடும்? இது வெல்லாம் அடிப்படையற்ற வீண்கூற்றேயாகும். கிருஸ் தவர்களுடனும், எஹூதிகளுடனும் செய்த யுத்தங்களும் இத்தகைய தற்காப்பு யுத்தங்களேயாகும்.

மக்காவை ஜெயித்தல். மக்காவாசிகளுக்கும், தீர்க்க தரிசியின் சிஷ்யர்களான மதீனாவாசிகளுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அதில் ஒவ்வொருவரும் பிற ருடைய நேசக்கக்ஷியாருக்கு தொந்திரவளிக்கக் கூடாது என்ற ஓர்நிபந்தனையும் கண்டிருந்தது. அதற்கு எதிரிடையாக மதீனாவின் நேசக் கக்ஷியாரான குஸாஆ கூட்டத்தாரை, மெ க்கா வாசிகள் தங்கள் நேசக்கக்ஷியாரான பனீபக்கர்களுடன் சேர்ந்து தாக்கி அதிகமான உயிர் சேதத்தை விளைவித்து விட்டனர். இதற்கு பரிகார நஷ்டஈடு மதினாவாசிகளால்

கோபப்பட்டபோது, மக்கா வாசிகள் நஷ்ட ஈட்டையும் மறுத்ததுடன் உடன்படிக்கையையும் கிழித்து எறிந்துவிட்டனர்: இதனுலும் இன்னும் பல தொந்திரவுகளினுலும் முஸ்லிம்களுக்கு மக்காவின் மீது படைஎடுப்பது அவசியமாகிவிட்டது. அவ்வாறே ஹிஜ்ரி 8 A. H.-ம் வருஷத்தில் தீர்க்கதரிசி முகம்மது (ஸல்) அவரது 10,000 வீரர்களான சகாக்களும், நேசக்கக்ஷியாருமாக மெக்காவின் மீது படை எடுத்து வெகுலேசான ஓர் தாக்குதலுக்குப்பின் அதைப் பிடித்துக்கொண்டனர். பட்டணத்தில் புகுது முன் பட்டண வாசிகளில் தம் தம் இல்லத்திலேயே இருந்துவிட்டவர்கட்கும், பரிசுத்த தேவாலயத்தில் புகுந்து கொண்டவர்களுக்கும், குரைஷித்தலைவர் அபூசுப்யான் வீட்டில் புகுந்து கொண்டாருக்கும் மன்னிப்பு அளிக்கப்படும் என்று பிரகடனப்படுத்தினுர்; இஸ்லாம் வாள் நுனியால் பரத்தப்பட்டதெனப் பறைசாற்றுவோர், இச்சமயம் ஜயசீலரான தீர்க்கதரிசி ஏன் இத்தகைய உத்தரவைப் போடுவித்தார் என்று தருவிப்பார்க்கட்டும்.

தங்களை 21 வருடகாலமாக மனித சமூகத்தால் சாத்தியமான எல்லாவித வழிகளாலும் தொந்தரை செய்து சிரத்தையும் கொய்யக்காத்திருந்த ஓர் பட்டணத்தாரை அவர்களை அடியோடு ஜெயித்து ஜயசீலருக அவர்கள் முன் நின்றகாலத்தில் பிரதியாக அவர்களையெல்லாம் வதைசெய்தாரா? அல்லது கொலைசெய்தாரா? இல்லவே இல்லை. அத்தகைய கொடும்பாவிகளை சர்வமும் மன்னித்து விட்டார். தங்களை மெக்காவைவிட்டு அவர்கள் விரட்டியகாலை மெக்காவில் விட்டுச்சென்ற தங்கள் ஸ்தாவர ஜங்கமச் சொத்துகளையும் திரும்பப்பெற்றனரில்லை. இந்தப்படை எடுப்பிலும் வாளேந்தி எதிர்த்த இக்ரிமா என்ற தலைவரையும் மன்னித்தனர். தீர்க்கதரிசியின் சிறியதகப்பனுர் ஹம்சா

அவர்களை கொலைசெய்த வஹ்ஷி என்பவரையும், அவரது ஈரலை வாயில்வைத்துச் சுவைத்த ஹிந்தா என்னும் பெண்ணையும் மன்னித்துவிட்டார். எந்த நாகரீக அரசாங்கமாவது இத்தகைய மன்னிப்பை வெளியாக்க முடியுமா? எந்த முற்காலச் சரித்திரத்திலாவது இத்தகைய ஒப்பற்ற உதாரகுணத்தைக்கண்டுகொள்ள முடியுமா? முடியாது. இந்நிகட்சிகளிலிருந்து இவரது-நபிபெருமானது-போதனை சிரேஷ்டம் எத்தகையதென்னும் சாக்ஷி வெளியாகின்றது. சத்தியப்பிரசார எதிரிகளுக்கு ஏற்பட்ட இத்தகைய அபஜயமானது அப்பிரசாரத்தின் உண்மையை வெகுவாய் வெளிப்படுத்தி விட்டது.

கடைசி ஹஜ்:-மேலே கண்டவாறு மக்காநகர் ஜெயிக்கப்பட்ட பின்பு இஸ்லாத்தின் போதனை முறையின் எளிய தன்மையைத் தெரிந்து அரேபியா ஜனங்கள் அனைவரும் தங்கள் சொந்த அபிப்பிராயத்தின் மீது இஸ்லாத்தில் சேர்ந்துவந்தனர். சராசர ஜோதியான முகம்மது (ஸல்) அவர்கள் தங்கள் தீர்க்கதரிசனத்துவத்தின் லக்ஷியமானது ஒருவாறு பூர்த்தியடைந்து வருவதைக்கண்டு, ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதற்காக மெக்காவிற்கு ஹஜ்ஜு செய்யப் புறப்பட்டார்கள். மெக்காவைவிட்டு இப்பிரசாரம் செய்ததற்காக தன்னந்தனியே வெளியே துரத்தப்பட்ட இம் மஹானுடன், இது சமயம் 124000 சிஷ்யகோடிகள் சேர்ந்து சென்றனர். 10வருடங்கட்குமுன் எங்கும் தம்மைச் சூழ தமது பகைவர்களையே தரிசித்துக் கொண்டிருந்த இம்மகானுபாவர், இன்று தம்மைச்சூழ லைக்ஷக்கணக்கான பக்தர்கள் நிஷ்டைகளில் மூழ்கியிருக்கும் காக்ஷியைக் கண்ணுற்றோராய்த் தமது ஹஜ்ஜுக்கிரியையை முடித்துக் கொண்டு "அரபாத்" என்ற மலையடிவாரத்தில் நின்று கொண்டிருக்கும்போது ஆண்டவனிடமிருந்து "இன்று

உமக்கு உமது மார்க்கத்தை பூர்த்திசெய்து விட்டேன்; மேலும், உம்மீது எனது அருளையும் பூர்த்தி செய்து விட்டேன்" (அல்-குர்ஆன் 5 : 3.) என்ற வேதவாக்கியம் அவருக்கு வெளியாக்கப்பட்டது.

அதன்பின் அம்மஹான் மினாவெனும் இடத்தில் அப் பெரும் ஜனக் கூட்டதிற்கு தமது கடைசி உபதேசம் செய் கையில், " ஏ மக்காள்! என்வார்த்தைகளைச் செவிமடுத்துக் கேளுங்கள், ஏனெனின் இதற்கப்புரம்மறுபடியும் உங்களெல் லீரையும் இங்கு நான்பார்ப்பேன் என்பது அவ்வளவு நிச்சய மன்று. இது எத்தகைய தினமென்றும், மாதமென்றும், ஸ்தலமென்றும் தெரியுமா? பரிசுத்த யாக தினமும், பரிசுத்த மாதமும், பரிசுத்த பட்டணமுமாகும். ஆகவே, உங்கள் அனைவர் ஜீவனும், பொருளும், கண்ணியமும் இந்தத்தின, மாத, பட்டணத்தைப் போன்று மரிசுத்தமாகவே இருக்கக் கடவது. இங்குவந்திருப்போர் வராதவர்கட் கு இவ் விஷயத்தை தெரிவிப்பாராக. மறுமையில் உங்கள் கர்த்தனை நீங்கள் சந்தித்து, உங்களது செய்கைகளுக்கு அவனிடம் கணக்குக் கொடுக்க நேரிடும்.

" மேலும், உங்கள் பாரியைகளின் மீது உங்களுக்கு இருக்கும் சுதந்திரத்தைப் போன்று, அப்பெண்மணிகட்கு உங்கள் மீதும் உண்டு; அம்மாதர்கள் ஆண்டவனால் உங்க ளிடம் சாட்டப்பட்டிருக்கின்றனர். எனவே அவர்களைப்பக்ஷ மாகப் பராமரித்துவாருங்கள். பின்னும் உங்கள் அடிமைகட் கும் நீங்கள் சாப்பிடுவதையும் உடுத்துவதையுமே கொடுத்து அன்பாக நடத்துங்கள். உங்களுள் ஒவ்வொருவரும் மற்ற வரின் சகோதரராவார்., எல்லோருக்கும் சம உரிமையுண்டு நீங்கள் அனைவரும் விசுவாசசகோதரத்துவத்தின் உறுப்பினர் களே., ஓர் சகோதரரின் பொருளையோ, அல்லது உரிமை

யையோ மற்றவர் அபகரிப்பது தகாது,'' என்று தெளிவாக வும் உருக்கமாகவும் கூறி எல்லோருக்கும் எச்சரித்தார்கள்.

பூரணவெற்றி. இஸ்லாத்தின் தீர்க்கதரிசியின் உபதேச வெற்றியானது மற்றெந்த தீர்க்கதரிசிகளினது ஜீவிய காலத்தில் கிடைத்திராத ஒப்பற்ற வெற்றியாகவே இருக் கிறது. நோஹ் என்ற தீர்க்கதரிசி 950 வருடகால ஜீவியம் முழுதும் ஏகதெய்வக் கொள்கையை உபதேசித்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓர் சிலரைத் தவிர்த்து மற்றையோர் அனைவரும் அதனை ஒப்பாது மாபெரும் ஜலப்பிரளயத்துள் ஆழ்ந்துமடிந்தனர். மோஸஸ் என்பவரின் காலத்திலும் பெரும் பாலோர் அவரை எதிர்த்து, ஏதோ ஓர் கூட்டத்தார் அவரை ஒப்புக் கொண்டனர். எனினும், அடுத்தடுத்து அந்த சிஷ்யர்கள் ஓர் முறை ஒப்புவதும், மறுமுறை மறுப்ப தாகவுமே இருந்து அவரை அதிகம் தொந்தரவுக்கு ஆளாக் கினர். ஜீஸஸ் தீர்க்கதரிசியையும் அக்காலத்தவர் அதிகம் இம் சித்து, கிருஸ்தவர்கள் சொல்லுவதுபோல், அந்த உப தேசியையே கொன்று ஒழித்து விட்டனர். இந்த முப்பெரும் தீர்க்கதரிசிகளும் தங்களின் சேவைப் பலனைச் செவ்வனே தங்கள் ஜீவிய காலத்திலேயே தரிசித்துச் செல்லவில்லை. இவர்களுக்கெல்லாம் நூற்றுக்கணக்கான வருட ஆயுட்கால மளிக்கப்பட்டிருந்தன.

எம்பிரான் முகம்மது(ஸல்)அவர்களின் ஆயுட்காலமோ நூற்றுக்கு உள்பட்டதேயாகும். தமது உபதேச ஆரம்ப காலமான 40-ம் பிரயத்தில் தன்னந்தனியாக ஏக நாயகத்துவத்தைப்போதித்தவர், 63 பிராயத்துக்குள் லக்ஷக் கணக்கான மக்களை அந்தக் கொள்கையின் கொடியின் கீழ் பார்க்கும் பாக்கியத்தைப்பெற்றூர். இந்த 23 வருட குறு கிய கால அளவிற்குள் மற்றெந்த தீர்க்கதரிசியோ சீர்திருத்தக்

காரரோ அல்லது ராஜீயவாதியோ தங்கள் கொள்கையில் இத்தகைய பரிபூரண வெற்றி பெற்றிருப்பதை காண்பரிது? மேலும், 1354 வருட காலமாக தனது நோக்கத்தில் எவ்விதமாறுதலுமின்றி பல் வேறு கோடிமக்களைத் தன்னுள் கொண்டு விசாலமடைந்திருக்கும் எந்த மதத்தையும் உலகில் காண்பதரிது.

தீர்க்கதரிசியின் குணாதிசயம். இன்னார் மக்காவில் அகதியாயும் பின்னர் ஓர் தீர்க்கதரிசியாயும் மதீனாவில் அரச சம்பத்தினராயும் பற்பல நிலைகளில் வீற்றிருந்தும் அவரது நடை உடை குண குணங்கள் எவ்விதமாறுதலு மடையாது ஓரே தன்மைத்தாகவே இருந்தன. கௌரவ அல்லது அகம்பாவ மாறுதல்கள் எதுவும் அவரிடம் காணப்படுதல் அரிது. மக்கள் பற்பலவாழ்க்கை ஸ்திதிகளிலும் ஓரே மாதிரியாக இருக்கவேண்டியதன் உண்மையை அன்னார் அனுஷ்டித்துக்காட்டினர்.

எளியோருக்கு தமதுகையாலேயே தானமிடுவார். தமது பத்தினிகளுக்கு குடித்தன வேலைகளில் உதவிபுரிவார். ஆடுகளிடம்தாமே பால்கறந்து, தம்கிழிந்த ஆடைகளையும் தாமேதைத்துக்கொள்வார். ஒட்டகைகளுக்குதாமே தீனி போடுவார். கடைவீதிகளுக்குதாமே சென்று தமக்கும் தம் அயல்வீடுகளுக்கும் சாமான்வாங்கிவருவார். எந்த கீழான வேலையையும் அவர் அவமதிப்பதில்லை. வாகனத்தில் தாம் மட்டும் அமர்ந்து மற்றவரை நடந்து வரவிடார். பணக்காரரோ அன்றி எழையோ எவர் அழைத்தாலும் சென்று விருந்தோம்புவார். அடிமைகளுடனும் விகாரமின்றி கூடிப்பழகுவார். ஜனக்கூட்டத்தில் வித்தியாசமின்றி அமர்வதால் புதிதாய் அவரைப்பார்ப்போருக்கு அடையாளங்கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிடும்.

எத்தகைய ஆகாரமேயாயினும் கிடைப்பதைப் புசித்து திருப்தியடைவார், உயர்வானவற்றையேசதா விரும்பி நிற்க மாட்டார். ஒருவேளையில் ஓர் மாதிரியான ஆகாரத்தை மட்டுமே உட்கொள்வார். அவரது உடைகள் சாதாரண மாகவும் வெகு சுத்தமாகவும் இருக்கும். கிழிந்ததுணி களுக்கு ஒட்டுப்போட்டுதைத்து உடுத்தவும் அவர் சங்கோ சப்படார். அவர்குடி இருக்கும் வீடு அவ்வளவு விசாலமா யிராது; பச்சைவெட்டுகற்களால் கட்டப்பட்டிருக்கும். ஓர் கட்டிலும், ஒரு தண்ணீர் கூஜாவுமே அவரது வீட்டு தளவாடம். அரசசம்பத்திலுங் கூட இவைகளே அவரது சாமான்கள். வீட்டில் பலதினம் தீமூட்டப்படாது வெறும் பழங்களையே புசித்து இருப்பார்-பட்டினியுமிருப்பதுண்டு. எந்த நேரமும் மலர்ந்தமுகத்துடனேயே மித்திரர்களையும் மற்றோர்களையும் சந்திப்பார். குழந்தைகளிடம் இவருக்கு வெகு பிரியம். மற்ற சோதரர்களின் குழந்தைகளை தம் தோளில் வெகு பக்ஷமாய்த் தூக்கிப்போவார். புரம், பொய், கோள் முதலியவற்றை அறவே விரும்பார்.

தமது சோதரர்களிடம் பக்ஷமாக இருப்பதுபோன்றே தமது பகைவர்களிடமும் இருப்பார். அப்துல்லாஹிப்னு உப்பை என்பவர் இஸ்லாத்தின் பரம விரோதி. எனினும் அவர் இறந்தபொழுது பெருமானுர் அவருக்காக பாப மன்னிப்புக்கு இறைவனிடம் இறைஞ்சினுர்; யுத்தகைதி கட்கு ஒழுங்கான சௌகரியம் செய்துவைக்கும் வரைத் தாம் தூங்கமாட்டார். மதீனுவில் இவரிடம் முஸ்லிம் களும் எஹூதிகளும் மத்தியஸ்த்தத்துக்கு வந்து ஒரே வித மான நியாயத்தையே பெறுவர். இம்மாதிரி ஓர் முறை தீர்ப்புக்கு வந்து எஹூதியின் சார்பிலேயே தீர்ப்புக் கிடைத்தது "முகம்மதின் மகளான பாத்திமா திருடினுலும் அவரது கரமும் துண்டிக்கப்படும்" என்று தமதுவாயா லேயே கூறியுள்ளார்.

எவ்வளவு எளிய நிலைமையில் வாழ்க்கை நடத்திய போதினும் அவர் ஏழைகளையும், அகதிகளையும், ஆதரிக்க பின் வாங்குவதில்லை. அதிக நபர்கள் வந்து தம்மால் முடியாது என்றுகண்டால் மட்டில் சிலரை தம்தோழர்களிடம் உபசரிக்கும்படி விடுத்தனுப்புவார். அற்பப்பிருணிகளிடமும் இவர் அதி பக்ஷமாகவே நடப்பார். முதன் முதலில் ஹதீஜா என்றவிதவை மாதைத்தாமே மணம் முடித்து விதவைகட்கு ஓர் விமோசனத்தை ஏற்படுத்தியதுடன் அத்தகையோர் இடம் அதிகம் அன்பும் சலுகையும் காட்டி வந்தார். நோய் வாய்ப்பட்டோரைச் சென்று வினவுவதிலும், பிரேதங்களின் பின் செல்லுவதிலும் அவர் பின் வாங்கார். விருந்தாளிகளுக்கு இடவசதிகளளித்து உபசரிப்பதில் இவரைமிகைப்பவர் கிடையாது. எவரையும் குற்றம் குறைகளில் அதிகமாக கடிந்துகொள்ளார். அவரை "சாகக்கடவது" என்றவரையும் பிரதியாக கடினபதங்களால் எதிர்க்கவேண்டாமென்று உபதேசித்த மஹான்.

இவாது பிரசாரத்துக்கு முன்பும்—பின்பும் இவரை "நம்பிக்கையாளர்" என்று சொல்வதை மட்டும் எவரும் மறுக்கவில்லை. உஹத் யுத்தத்தில் தாம் எதிரிகளால் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அடைந்தும் அவ்வெதிரிகளைத் தம்வாயால் சபிக்க ஒப்பினரில்லை. இவர் எவ்வளவு அடக்கமாக இருந்தாலும் ஓர் பொழுதும் கோழையாக இருந்ததில்லை. உஹத், கைபர் யுத்தங்களிலும், மக்காவிலிருந்து மதீனாவிற்கு செல்லும் தருவாயிலும், நடந்துகொண்ட விதமும், மதீனா ஓர் இரவு எதிரிகளால் திடீரெனத் தாக்கப்படலாமென்று சந்தேகிக்கப்பட்டபொழுது இவர் ஆயுதபாணியாய் தன்னந்தனியே ஊரைச்சுற்றி வந்த காக்ஷியும் இவர் எவ்வளவு தீரர் என்பதை ருஜூப்பிக்கின்றன.

இவரது மூலக்கொள்கையான ஏக தெய்வக்கொள்கை யையும், ஏக சகோதரத்துவக் கொள்கையையும் விட்டு விடும்படி இவருக்கிழைக்கப்பட்ட மனுஷ ஹிருதயமே திடுக்கிடத்தக்க எத்தனையோ கஷ்ட சம்பவங்களினாலும் இவர் சற்றும் மனந்தளர்வுறாது, எத்தகைய ஸ்திரபான்மை கொண்டிருந்தார் என்பதற்குச் சரித்திரமே சான்று பகர் கின்றது. இத்துணைநெடிய சோதனைகளிலும் தெய்வானுக் ரஹமட்டும் இல்லாதிருக்குமாயின், அவற்றை ஒருபொழு தும் மனித சுபாவத்தால் சகித்து வெற்றிபெறுவதென்பது முடியவே முடியாது.

முடிவுரை.

மேற்கண்ட முப்பெரும் அத்தியாயங்களிலுமிருந்து கடவுள், மதம், தீர்க்கதரிசிகள் என்போரின் சம்மந்தா சம்மந்தங்கள் எத்தகைய தென்றும், மனித கோடிகள் முக்தியடையும் பொருட்டு எவ்வாறு நடக்கவேண்டுமென் றும், அதிலும், இயற்கைக் கொத்த ஆதார பூர்வமான வழியையே பின்பற்ற வேண்டுமென்றும் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். இஸ்லாத்தின் கொள்கைப்படி மனி தப் பிறவியின் லக்ஷியம், ஏகசிருஷ்டிக் கர்த்தனை ஏற்று அவ னது தீர்க்கதரிசி மூலம் அருளிய ஏக சகோதரத்துவத் திலும், இகலோக பரலோக தர்ம கைங்கரியங்களிலும் ஈடுபட்டிருந்து புருஷார்த்தமான பரலோக பிராப்தியடைய வேண்டுமென்பதேயாகும். அந்த இயற்கை சாதனமனைத் தையும் ஒருங்கே திரட்டி கர்த்தாலேயே இம்மன்பதை களுக்கு அனுப்பப்பட்ட "குர்ஆன்" என்ற வேதம், இன்றளவும் அதன் வெளிப்பாட்டுக் காலத்திலிருந்து

எத்தகையமாறுதலுமின்றி மக்களின் உபகாரார்த்தமாக மிளிர்ந்து வருகிறது. மேலும் அவ்வுபதேசமனைத்திற்கும் ஓர் பூரணமுன் மாதிரியாகவே வாழ்ந்து சென்ற, அந்த மக்கட் பூண்டிற் குவந்த மாதிரியான முகம்மது (ஸல்) வின் ஜீவியக் குறிப்புகளும் உங்கள் முன் நிற்கின்றன. முற்காலத் தீர்க்கதரிசிகளை போன்று குறிப்பிட்ட ஓர் வர்க்கத்தாருக்கேயன்றி மனுஷ்ய கோடிகளனைத்திற்கும், எல்லா காலத்துக்கும் ஒத்தவகையிலும், வெளியாக்கப்பட்டுள்ள அந்த தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் போதனை சாதனைகளிலுள்ள உண்மையையும், சிரேஷ்டத்தையும், அனுபவ சாத்திய சாதனங்களையும், பிற சமயங்களை ஒப்பிட்டுப்பார்ப்பதன் மூலம் செவ்வனே தெரிந்துகொள்வீர்களாக. கேட்பவைகளிலிருந்து சிறந்ததை ஏற்றுக்கொள்வதே ஆன்றோர்முறை.

முற்றிற்று.

கருணாநந்த ப்ரஸ், விஜயபுரம் 35 mgp.

விஞ்ஞாபனம்

சகோதரர்காள்!

எமது சபாவானது அதன் உற்பத்திகாலம் முதல் நமது சமயத்துக்கும், சமூகத்திற்கும், எத்தகைய சேவை செய்துவருகிறதென்பதை தாங்கள் எல்லோரும் நன்குதெரிந்துகொண்டுதானிருக்கிறீர்கள். அதைப் போன்றே எதிர்காலத்திலும் இத்திருப்பணியிலேயே ஈடுபட்டிருக்க ஆண்டவன் அருளை அதிகம் கோருவதுடன், உங்களின் பலதிறப்பட்ட அன்பானஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

தங்களின் பணிவுள்ள

சன்மார்க்கத் தொண்டர் சபையார்,

கூத்தாநல்லூர்.

(தஞ்சை ஜில்லா.)

RIGHTS RESERVED TO THE AUTHOR.

Printed at the
KARUNANITHI (BUILDINGS) PRESS,
Vijayapuram—Tiruvarur.
35 mgp